மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை
இ.மஎண்.05/2024
உள்
அசல் வழக்கு எண்.67/2023

––––

1. C. சுடலையம்மாள்
2. C. முருகன்
3. S. சுப்புலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. S. உதயலட்சுமி
2. மோகன கிருஷ்ணன்
( தனது தாயாரும், இயற்கை பாதுகாவலருமான
S. உதயலட்சுமி மூலம்)
3. G. முருகலலட்சுமி
4. S. கணபதி
5. D. சுந்தரமகாலிங்கம்
6. சார்பதிவாளர் அவர்கள்,
சார்பதிவாளர் அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.
7. மாவட்ட பதிவாளர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.
8. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்பு 25.08.2025 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். முரளிதரன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. உதயகுமார், அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யவில்லை. 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுவில் கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் 151–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

2.1. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். வாதிகள் இறந்து போன சின்னதம்பி கோனாரின் வாரிசுகள் என விளம்புகை செய்யக்கோரியும், வாதியின் தகப்பனார் சின்னத்தம்பி கோனார் உயிருடன் இருக்கும் போது கடந்த 08.05.2015 ம் தேதியன்று 56/3/2015 என்ற உயிலை 6 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளது செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும், ஷை போலியான உயிலின் அடிப்படையில் ஷை செம்புக்குட்டி கண்ணன் தனது மனைவியும் 1 வது பிரதிவாதிக்கு கடந்த 30.07.2018 ம் தேதியன்று பிராது 1 வது அயிட்ட தபசில் சொத்தை 6 ம் பிரதிவாதியான சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3557/2018 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும், அதன்பின்னர் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளான உதயலட்சுமி தனக்காகவும் தனது மைனர் மகன் மோகனகிருஷ்ணனுக்கு தான் மற்றும் கார்டியன் ஸ்தானத்திலும் 1 ம் பிரதிவாதி என்பவருடன் கூட்டாக இணைந்து ஷை போலியான உயிலின் அடிப்படையில் ஷை 2 ம் பிரதிவாதி முருகலெட்சுமியின் கணவரும் 4 ம் பிரதிவாதியான கணபதிக்கு கடந்த 09.09.2022 ம் தேதி பிராது 2 மற்றும் 3 வது அயிட்ட தபசில் சொத்துக்களை 6 ம் பிரதிவாதியான சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.9503/2022 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும், அதன்பின்னர் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளான உதயலட்சுமி தனக்காகவும் தனது மைனர் மகன் மோகனகிருஷ்ணனுக்கு தான் மற்றும் கார்டியன் ஸ்தானத்திலும் 1 ம் பிரதிவாதி என்பவருடன் கூட்டாக இணைந்து 5 ம் பிரதிவாதியான சுந்தரமகாலிங்கம் என்பவருக்கு கடந்த 13.10.2022 ம் தேதி பிராது 4 வது அயிட்ட தபசில் சொத்தை 6 ம் பிரதிவாதியான சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.10710/2022 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2. மனுதாரர்கள்/வாதிகள் வழக்குத் தாக்கல் செய்தபோது, இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி, அந்த போலியான உயிலில் உள்ள சொத்து அட்டவணையின் 13வது அயிட்டம் தொடர்பாக மற்றொருவருடன் விற்பனை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார் என்றும், அது திருப்போரூரில் உள்ள துணைப் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றும் மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருப்போரூர் துணைப் பதிவாளர் மேற்கூறிய ஒப்பந்தத்தின் பதிவை தற்காலிகமாக நிறுத்திவிட்டார். கிரைய ஒப்பந்தமோ அல்லது கிரையமோ உயில் ஆவணத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே 9 முதல் 11 உத்தேச எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக ஏற்கனவே 19.02.2024ம் தேதி இடைக்கால மனு மூலமாக சேர்த்ததன் பொருட்டு அசல் வழக்கில் சீர்திருத்தம் செய்யக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>**6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 7,8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்**</u>:-

3.1. இந்தநிர் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க கோரியுள்ள நபர்கள் நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டவர்கள் ஆவார்கள். 9 முதல் 11 வரையான நபர்கள் அதிகார வரம்பெல்லைக்குள் வராததால் அசல் வழக்கில் தேவையில்லாத நபர்கள் ஆவார்கள். மேற்படி நபர்கள் அசல் வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் ஆவார்கள். எனவே இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>**6) தீர்வு**</u>:-

6.1. மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள்.

பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால் வாதியின் தகப்பனார் சின்னத்தம்பி கோனார் உயிருடன் இருக்கும் போது கடந்த 08.05.2015ம் தேதியன்று 56/3/2015 என்ற உயிலை 6ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளது செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும், ஷை போலியான உயிலின் அடிப்படையில் ஷை செம்புக்குட்டி கண்ணன் தனது மனைவியும் 1வது பிரதிவாதிக்கு கடந்த 30.07.2018ம் தேதியன்று பிராது 1வது அயிட்ட தபசில் சொத்தை 6ம் பிரதிவாதியான சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3557/2018 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும், அதன்பின்னர் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளான உதயலட்சுமி தனக்காகவும் தனது மைனர் மகன் மோகனகிருஷ்ணனுக்கு தான் மற்றும் கார்டியன் ஸ்தானத்திலும் 1ம் பிரதிவாதி என்பவருடன் கூட்டாக இணைந்து ஷை போலியான உயிலின் அடிப்படையில் ஷை 2ம் பிரதிவாதி முருகலெட்சுமியின் கணவரும் 4ம் பிரதிவாதியான கணபதிக்கு கடந்த 09.09.2022ம் தேதி பிராது 2 மற்றும் 3 வது அயிட்ட தபசில் சொத்துக்களை 6ம் பிரதிவாதியான சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.9503/2022 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும், அதன்பின்னர் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளான உதயலட்சுமி தனக்காகவும் தனது மைனர் மகன் மோகனகிருஷ்ணனுக்கு தான் மற்றும் கார்டியன் ஸ்தானத்திலும் 1ம் பிரதிவாதி என்பவருடன் கூட்டாக இணைந்து 5ம் பிரதிவாதியான சுந்தரமகாலிங்கம் என்பவருக்கு கடந்த 13.10.2022ம் தேதி பிராது 4வது அயிட்ட தபசில் சொத்தை 6ம் பிரதிவாதியான சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.10710/2022 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி, அந்த போலியான உயிலில் உள்ள சொத்து அட்டவணையின் 13வது அயிட்டம் தொடர்பாக மற்றொருவருடன் விற்பனை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதை மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருப்போரூர் துணைப் பதிவாளர் மேற்கூறிய ஒப்பந்தத்தின் பதிவை தற்காலிகமாக நிறுத்திவிட்டார். கிரைய ஒப்பந்தமோ அல்லது கிரையமோ உயில் ஆவணத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே 9

முதல் 11 உத்தேச எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக ஏற்கனவே 19.02.2024ம் தேதி இடைக்கால மனு மூலமாக சேர்த்ததன் பொருட்டு அசல் வழக்கில் சீர்திருத்தம் செய்யக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில், 9 முதல் 11 வரையான பிரதிவாதிகள் அசல் வழக்கிற்கு தேவையற்ற கட்சிக்காரர்கள் என்றும் எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.3. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருப்பினும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.05/2024
உள்
அ.வ.எண்.67/2023
**<u>உத்தரவு</u>**
**நாள்–** 10.09.2025.